COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
APR 2008
CHENNAI-600 005

## சுருக்கம்

மானியக் கோரிக்கை –2007-08 மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிவிப்பு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்து மற்றும் +2 படிக்கும் மாணவ மாணவிகளில் 2007–08 ஆம் ஆண்டில் மாநில அளவில் இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பட்டப் படிப்புக்கு உதவித் தொகை வழங்குவது குறித்து – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**அரசு ஆணை (நிலை) எண். 55** நாள் 31.3.2008

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.2493/08/எம்.3.
நாள் 14.1.08 மற்றும் 14.2.08

ஆணை : –

2007–08 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

அறிவிப்பு எண்.24

நகராட்சி , மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 25 மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநகராட்சி, நகராட்சி நிதியிலிருந்து பாராட்டுப் பத்திரங்களும், பரிசுத் தொகையும் வழங்கி சிறப்பிக்கப்படும். மேலும் இவர்களில் பொருளாதார காரணங்களுக்காக உயர் கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ள மாணவ மாணவியரின் பட்டப் படிப்புச் செலவுகள் அனைத்தும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர் படிக்கப்பட்டுள்ள தனது கடிதங்களில், மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக பொது நிதி (Corpus fund) ஒன்றை உருவாக்குவதற்கு, நடப்பாண்டு 2007–08 ல் அனைத்து நகராட்சி மற்றும்

மாநகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்படும் என்றும், இதற்கு இணையானியமாக அரசிடமிருந்து ரூ.2.00 கோடி மான்யமாக வழங்க வேண்டும் என்றும், இந்த பொது நிதி "மாநகராட்சி / நகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி" என்று பெயரிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

3) மேலும் இந்தப் பொதுநிதி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் என்றும், மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.4.00 கோடி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்/ மாநில நிதி நிறுவனங்களில் நீண்ட கால வைப்புகளில் முதலீடு செய்யப்படும் என்றும் , இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.36 இலட்சம் வட்டி கிடைக்க வாய்ப்புள்ளது என்றும், இந்த வட்டி தொகையைக் கொண்டு அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 25 மாணவ மாணவிகளுக்கு பரிசுத் தொகையும், பட்டப் படிப்புச் செலவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும், 2007-08 ஆம் நிதி ஆண்டின் இறுதியில் பெறப்பட்டு வங்கியில் முதலீடு செய்யப்படும் இந்தத் தொகை ரூ.4.00 கோடிக்கு வருட வட்டி, அடுத்த நிதி ஆண்டு 2008-09 இறுதியில் தான் வங்கியால் வரவு வைக்கப்படும் என்றும், ஆனால், 2007-2008 ஆம் ஆண்டு பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளின் அடிப்படையில் முதலாவதாக தேர்வு செய்யப்படும் 25 மாணவர்களுக்கு பரிசுத் தொகையும், கல்வி உதவித் தொகையும் ஜூன் 2008 லிருந்து ஆகஸ்ட் 2008 ற்குள் வழங்கப்பட வேண்டும் என்றும், இதற்கு தனியே கல்வி நிதியிலிருந்து ஒதுக்கீடு பெறப்பட வேண்டும் என்றும், இத்தொகையினையும், பொது நிதிக்கு பெறப்படும் தொகையினையும் சேர்த்து மாநகராட்சி / நகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ஒதுக்கீடு கீழே கண்டவாறு பெறப்படும் என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

| | மாநகராட்சி / நகராட்சி விவரங்கள் | எண்ணிக்கை | கல்வி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| I | மாநகராட்சி | | | |
| 1 | கோயமுத்தூர் | 1 | 6.00 | 6.00 |
| 2 | மதுரை | 1 | 6.00 | 6.00 |
| 3 | சேலம் | 1 | 5.00 | 5.00 |
| 4 | திருச்சி | 1 | 5.00 | 5.00 |
| 5 | திருநேல்வேலி | 1 | 5.00 | 5.00 |
| 6 | ஈரோடு | 1 | 3.00 | 3.00 |
| 7 | திருப்பூர் | 1 | 3.00 | 3.00 |
| | மொத்தம் | 7 | | |

| II | நகராட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | சிறப்பு நிலை நகராட்சிகள் | 11 | 2.00 | 22.00 |
| | தேர்வு நிலை நகராட்சிகள் | 28 | 2.00 | 56.00 |
| | முதல்நிலை நகராட்சிகள் | 36 | 1.50 | 54.00 |
| | இரண்டாம் நிலை நகராட்சிகள் | 26 | 1.50 | 39.00 |
| | மூன்றாம் நிலை நகராட்சிகள் | 49 | 1.00 | 49.00 |
| | மொத்தம் | 150 | | |
| | | | ஆக மொத்தம் | 253.00 |

மேலும் மேலே குறிப்பிட்ட தொகை ரூ.2.53 கோடியில் 2007–08ஆம் ஆண்டு தேர்வுகளில் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதலாவதாக வரும் 25 மாணவர்களுக்கு பரிசுத் தொகை ரூ.10,000/– மற்றும் மேற்படிப்பு கல்வி உதவித் தொகைக்காக ரூ.21 இலட்சம் கையிருப்பாக வைத்துக் கொண்டு மீதமுள்ள தொகை ரூ.2.30 கோடி மற்றும் அரசு மான்யத் தொகை ரூ.2.00 கோடியும் சேர்த்து ரூ.4.30 கோடி நீண்டகால வைப்பில் முதலீடு செய்யப்படும் என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

4) பொது நிதி (Corpus Fund) நிர்வகிக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக ஆணையர், நகர்மன்றத் தலைவர்களின் தலைவர், ஒரு மாநகராட்சி மேயர் ஆகிய உறுப்பினர்களைக் கொண்டு ஒரு பொறுப்பாட்சிக் குழுமம் உருவாக்கலாம் என்றும் பொது நிதி (Corpus fund) நிர்வகிப்பதும், பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளில் பெறும் அதிகபட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் தகுதியான மாணவர்களைத் தேர்வு செய்வதும், இவர்களில் பொருளாதார அடிப்படையில் ஏழை மாணவர்களை மேற்படிப்புக்கு தேர்வு செய்வதும், இந்த குழுமத்தின் கடமையாகும் என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5) எனவே இத்திட்டத்திற்காக பொது நிதி (Corpus Fund) உருவாக்க நகராட்சிகளிடமிருந்து பெறப்படும் கல்வி நிதி ரூ.2.00 கோடிக்கு இணையாக அரசு ரூ.2.00 கோடி (இரண்டு கோடி மட்டும்) இணை மானியமாக வழங்குமாறும், மேலும், 2007–2008 ஆம் ஆண்டு பொதுத் தேர்வு நடைபெறும் சூழ்நிலையில், இத்திட்டத்தினை உடனே செயல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதால் மாநகராட்சிகள் / நகராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து பிப்ரவரி மாதத்தில் பிரித்து வழங்கப்பட உள்ள மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து பத்தி-3 ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.2.53 கோடியினை பிடித்தம் செய்து பொது நிதிக்கு உடனே மாற்றம் செய்திடவும், பின்னர் உள்ளாட்சி நகர்ப்புற அமைப்புகளின் கல்வி நிதியிலிருந்து இந்தத் தொகையினை

பொது நிதிக்கு மாற்றம் செய்திடவும் அரசு அனுமதி அளிக்குமாறும், நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6) மேற்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. 2007-08ல் மாநில அளவில், பத்து மற்றும், +2 இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் , மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத்தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும் , அவர்களுள் பொருளாதார காரணங்களால் பட்டப்படிப்பை தொடர இயலாத மாணவ / மாணவியருக்கு அரசு கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம், உணவுக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே உதவித்தொகையாக நிர்ணயம் செய்ய வேண்டும்; மற்றும் அவ்வாறு உதவித்தொகை பெறும் மாணவ / மாணவியர் ஏதாவது ஒரு உதவித் தொகை (Scholarship) மட்டும் தான் பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, உதவித் தொகை வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. மேலும் அரசிடம் ரூ. 2.00 கோடி இணை மானியம் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று, அந்த ரூ.2.00 கோடியை கேளிக்கை வரி இழப்பீடு ஈட்டு நிதியத்திலிருந்து வழங்கியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து பிரித்து வழங்கப்படவுள்ள 2007–08 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு மானியத்தின் இறுதித் தவணையிலிருந்து ரூ.2.53 கோடியை மேலே பத்தி–3ல் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சி / நகராட்சிகளின் சார்பாக பிடித்தம் செய்து " மாநகராட்சி/நகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி",(Corpus Fund)-க்கு உடனே மாற்றம் செய்திடவும், பின்னர் இத்தொகையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானத்தைப் பெற்று உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிதியிலிருந்து பொது நிதிக்கு மாற்றம் செய்திடவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5.
உள்ளாட்சி நிதி கணக்கு தணிக்கை, சென்னை.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ , சென்னை –35
அனைத்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர்கள்,
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை 600 018.

மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ருறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர்
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009.

<u>நகல்</u>

முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை 600 009.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 600 009.
நிதித் துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(வ/செ) துறை, சென்னை 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 1/4/08